TAMILTH Chennai 1 Regional_02 231922
© 2006-2017 Kasturi & Sons Ltd. - -shivaprasad.p@hindutamil.co.in -

யுபிஎஸ்சி, டிஎன்பிஎஸ்சி தேர்வுகளில் வெற்றி பெற

‘ஆளப் பிறந்தோம்’ வழிகாட்டு நிகழ்ச்சி

● சென்னை அண்ணா பல்கலையில் இன்று நடைபெறுகிறது

சென்னை

‘இந்து தமிழ் திசை’ நாளிதழ் ‘சங்கர் ஐஏஎஸ் அகாடமி’யுடன் இணைந்து வழங்கும் ‘ஆளப் பிறந்தோம்’ எனும் வழிகாட்டு நிகழ்ச்சி சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள விவேகானந்தா அரங்கில் இன்று (டிச.15) நடைபெற உள்ளது.

யுபிஎஸ்சி, டிஎன்பிஎஸ்சி தேர்வுகளில் வெற்றிபெற வேண்டுமென்ற ஆசை பலருக்கும் உண்டு. ஆனால், அதற்கான அடிப்படை கல்வித் தகுதி என்ன? எத்தனை ஆண்டுகள் படிக்க வேண்டும்? அதிக செலவாகுமா என ஏராளமான கேள்விகளுடன் தயங்கி நிற்பவர்களே அதிகம்.

அந்த தயக்கத்தைப் போக்கும் வகையிலும், இந்தத் தேர்வுகளுக்குப் படிப்பதற்கான தெளிவைத்தரும் நோக்கிலும் ‘ஆளப் பிறந்தோம்’ என்ற நிகழ்ச்சி நடத்தப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில் பள்ளி, கல்லூரி மாணவ-மாணவிகளும், யுபிஎஸ்சி, டிஎன்பிஎஸ்சி தேர்வுகளுக்குத் தயாராகும் அனைவரும் கலந்துகொண்டு பயன்பெறலாம்.

இந்நிகழ்ச்சி சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள விவேகானந்தா அரங்கில் இன்று காலை நடைபெற உள்ளது. இதில் சென்னை அறிவியல் நகரத்தின் துணைத் தலைவர் உ.சகாயம், பொருளாதார நிபுணர் ஜெ.ஜெயரஞ்சன், ‘இந்து தமிழ் திசை’ நாளிதழின் நடுப்பக்க ஆசிரியர் சமஸ், சங்கர் ஐஏஎஸ் அகாடமியின் இயக்குநர் எஸ்.டி.வைஷ்ணவி ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரையாற்ற இருக்கிறார்கள். காலை 9 மணிக்குத் தொடங்கும் இந்த நிகழ்ச்சி மதியம் ஒரு மணி வரை நடைபெறும்.

இதில் பங்கேற்கும் அனைவருக்கும், அனைத்து தேர்வு மாதிரி வினாத்தாள், பாடத்திட்ட கையேடு இலவசமாக வழங்கப்படும். இதில் பங்கேற்க விரும்புவோர் 9773001174 என்ற செல்போன் எண்ணுக்கு, தங்களது பெயரைக் குறுந்தகவலாக (எஸ்.எம்.எஸ்.) அனுப்பி, பதிவுசெய்து கொள்ளலாம்.

SHANKAR IAS ACADEMY
உடன் இணைந்து
இந்து தமிழ் திசை
வழங்கும்
ஆளப் பிறந்தோம்!
உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்

தமிழக வாழ்வுரிமை கட்சிக்கு கேமரா சின்னம்

சென்னை

உள்ளாட்சி தேர்தலில் தமிழக வாழ்வுரிமை கட்சிக்கு கேமரா சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 27 மாவட்டங்களில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் வரும் டிச.27 மற்றும் 29 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. இத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நாளையுடன் நிறைவு பெறுகிறது. இந்நிலையில், பதிவு செய்யப்பட்ட கட்சிகள் கோரும் சின்னங்களை மாநில தேர்தல் ஆணையம் ஒதுக்கி வருகிறது.

இதுகுறித்து தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் தி.வேல்முருகன் வெளியிட்ட அறிக்கையில், “உள்ளாட்சி தேர்தலில் தமிழக வாழ்வுரிமைக் கட்சிக்கு கேமரா சின்னத்தை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் வழங்கியுள்ளது” என்றார்.

சென்னையில் 100-க்கும் மேற்பட்ட இடங்களில்

மாணவர்களுக்கு விளையாட்டு பயிற்சி

● ரோட்டரி சங்கம் ஏற்பாடு

சென்னை

சென்னையில் 100-க்கும் மேற்பட்ட இடங்களில் 17 விதமான விளையாட்டுகளில் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க ரோட்டரி சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. இதற்காக ‘கேப்பிடல் விளையாட்டு பயிற்சி விழா-2019’ என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது.

சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்தத் திட்டத்தை நடிகர் ஜீவா தொடங்கி வைத்தார். நலிவுற்ற விளையாட்டு வீரர்களுக்கான உபகரணங்களையும் அவர் வழங்கினார். இத்திட்டம் குறித்து ரோட்டரி சங்க தலைவர் சதீஷ், செய்தியாளர்களிடம் கூறியதாவது:

விளையாட்டுத் துறையில் முன்னேற முயற்சித்துவரும் மாணவ - மாணவியரை கண்டறியும் வகையிலும், நலிவுற்ற குடும்பத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களின் கனவுகளை நனவாக்கும் வகையிலும், ரோட்டரி கிளப் ஆஃப் சென்னை சார்பில் ‘கேப்பிடல் விளையாட்டு பயிற்சி விழா-2019’ என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போதுள்ள 17 விளையாட்டுகளில் சிறந்த பயிற்சியாளர்களைக் கொண்டு, சென்னையில் 100-க்கும் மேற்பட்ட இடங்களில் பயிற்சி அளிக்கவுள்ளோம். 6 முதல் 16 வயதுக்கு உட்பட்டோரை திறமையான விளையாட்டு வீரர்களாக தயார் செய்ய இந்த நடவடிக்கையை எடுத்துள்ளோம்.

இதற்காக ரூ.99 நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. பயிற்சி உட்பட தேவையான உபகரணங்களும் விளையாட்டு வீரர்களுக்கு இலவசமாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

கேப்பிடல் விளையாட்டு அறக்கட்டளை மூலம் 7 ஆயிரம் குழந்தைகளுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. நிகழ்ச்சியில் 200-க்கும் மேற்பட்ட சான்றளிக்கப்பட்ட பயிற்சியாளர்கள் மற்றும் ஆதரவு ஊழியர்கள் பங்கேற்க உள்ளனர்.

இதில் பங்கேற்க விரும்புவோர் ‘www.runadam.com’ என்ற இணையதளம் அல்லது ஆண்ட்ராய்டு பயன்பாட்டை பதிவிறக்கம் செய்வதன் மூலம் பதிவு செய்யலாம். பங்கேற்க விரும்புவோர் தங்களுக்கு பிடித்த விளையாட்டை தேர்வு செய்து, தங்கள் அருகில் உள்ள இருப்பிடத்தை பார்த்து ஆன்லைனில் பதிவு செய்யலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

கிரிக்கெட் போட்டியால் போக்குவரத்தில் மாற்றம்

சென்னை

இன்று நடைபெறவுள்ள கிரிக்கெட் போட்டி காரணமாக வாலாஜா சாலையில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்திய மற்றும் மேற்கு இந்திய தீவுகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி இன்றுசென்னை சேப்பாக்கம் எம்.ஏ.சிதம்பரம் கிரிக்கெட் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதையொட்டி பகல் 12.30 மணி முதல் இரவு 11 மணி வரை பெல்ஸ் சாலை, பாரதி சாலை, கெனால் சாலை, வாலாஜா சாலை, காமராஜர் சாலை போன்றவற்றில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த போக்குவரத்து மாற்றத்துக்கு வாகன ஓட்டுநர்கள் மற்றும் பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும், என போக்குவரத்து போலீஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

▲ போக்குவரத்து விதிமுறைகளை கடைப்பிடிக்க வலியுறுத்தி, வேப்பேரி போக்குவரத்து காவல் துறை சார்பில், சென்னை டவுட்டன் மேம்பாலம் அருகில் நேற்று நடைபெற்ற விழிப்புணர்வு பிரச்சாரத்தில் ஈடுபட்ட பள்ளி மாணவ - மாணவியர். உடன், காவல், போக்குவரத்துத் துறை அதிகாரிகள்.

படம்: பு.க.பிரவீன்

கொரட்டூர் ரயில் நிலையம் அருகே

சுரங்கப்பாதை அமைக்கும் பணி தாமதம்

● 6 ஆண்டுகள் ஆகியும் முடிவடையாததால் பொதுமக்கள் அவதி

திருவள்ளூர்

கொரட்டூர் ரயில் நிலையம் அருகே சுரங்கப் பாதை அமைக்கும் பணி தொடங்கப்பட்டு 6 ஆண்டுகள் ஆகியும் இதுவரை முடிவடையாததால், பொதுமக்கள் தினமும் 3 கி.மீ தூரம் சுற்றிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

திருவள்ளூர் - சென்னை சென்ட்ரல் மார்க்கத்தில் உள்ள முக்கிய ரயில் நிலையமாக கொரட்டூர் ரயில் நிலையம் உள்ளது. கொரட்டூரில் பல்வேறு தனியார் நிறுவனங்கள் மற்றும் கல்லூரிகள் உள்ளதால், வேலை மற்றும் கல்விக்காக தினமும் ஆயிரக்கணக்கானோர் கொரட்டூர் வந்து செல்கின்றனர்.

இந்த ரயில் நிலையம் அருகில் ரயில்வே கேட் உள்ளது. அடிக்கடி இந்தக் கேட் மூடப்படுவதால் பயணிகள், பள்ளி, கல்லூரி மாணவர்கள், வேலைக்கு செல்வோர் குறித்த நேரத்துக்கு செல்ல முடியாமல் அவதிப்பட்டனர். அவசர தேவைக்கு ஆம்புலன்ஸ், தீயணைப்பு வாகனங்கள் கூட செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

பொதுமக்கள், பயணிகள், இருசக்கர வாகன ஓட்டிகள் சிலர், கேட் மூடப்படும் நேரத்தில் தண்டவாளத்தைக் கடக்கும் போது ரயிலில் அடிப்பட்டு உயிரிழக்கின்றனர். எனவே, இப்பகுதியில் தண்டவாளத்தைக் கடக்க வசதியாக சுரங்கப் பாதை அமைக்க வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தி வந்தனர்.

கொரட்டூர் ரயில் நிலையத்தின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதியில் வசிக்கும் மக்கள் இருபுறமும் செல்ல ரயில்வே கேட் இடையூறாக உள்ளது. குறிப்பாக, கேட் மூடப்படும் சமயங்களில் ஒரு பகுதியில் இருந்து மற்றொரு பகுதிக்குச் செல்ல 3 கி.மீ தூரம் சுற்றிச் செல்ல வேண்டியுள்ளது என்றும், சுரங்கப்பாதை அமைத்து தரவேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர்.

இதையடுத்து, பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, தெற்கு ரயில்வே நிர்வாகம் சார்பில் சுரங்கப் பாதை அமைக்க ரூ.10.5 கோடி நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டன.

2 ஆண்டுகளில் பணிகளை முடிக்க திட்டமிடப்பட்ட நிலையில், 6 ஆண்டுகளை கடந்தும் இதுவரை பணிகள் முடியவில்லை. இதனால், பொதுமக்கள் கடும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர்.

சுரங்கப்பாதை அமைக்கும் பணி ஆமை வேகத்தில் நடைபெற்று வருவதால், பொதுமக்கள் அவசரத் தேவைக்குக்கூட ரயில் பாதையைக் கடந்து செல்ல முடியவில்லை. எனவே, காலம் தாழ்த்தாமல் சுரங்கப் பாதை அமைக்கும் பணியை விரைவாக நிறைவேற்ற வேண்டும் என இப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

> ▼ **2 ஆண்டுகளில் பணிகளை முடிக்க திட்டமிடப்பட்ட நிலையில், 6 ஆண்டுகளை கடந்தும் இதுவரை பணிகள் முடியவில்லை. இதனால், பொதுமக்கள் கடும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர்.**

சென்னை வியாசர்பாடி

முல்லை நகர் மயானத்தில் 3 நாள் பராமரிப்பு பணிகள்

சென்னை

சென்னை வியாசர்பாடி, முல்லை நகரில் உள்ள இந்து மயான பூமியில் பராமரிப்பு பணிகள் நடைபெற இருப்பதால், இன்று முதல் 17-ம் தேதி வரை 3 நாட்களுக்கு மயானம் இயங்காது.

சென்னை மாநகரில் உள்ள பல மயானங்கள் போதிய பராமரிப்பின்றி காணப்படுகின்றன. பல இடங்களில் செடி கொடிகள் முளைத்து புதர்மண்டி காட்சியளிக்கிறது. மழைக்காலம் என்பதால் மழைநீர் தேங்கி சுகாதாரமற்ற நிலையில் இருக்கிறது. எனவே, மயானங்களை பராமரிக்கும் பணியில் சென்னை மாநகராட்சி ஈடுபட்டுவருகிறது.

இது தொடர்பாக சென்னை மாநகராட்சி வெளியிட்ட செய்திக்குறிப்பு: மாநகராட்சி சார்பில் வியாசர்பாடி முல்லை நகரில் இந்து மயான பூமி இயங்கி வருகிறது. அதில், இன்று முதல் (டிச.15) 17-ம் தேதி வரை 3 நாட்களுக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

அதனால் இந்த 3 நாட்களுக்கு மயான பூமி இயங்காது. இந்நாட்களில் கொடுங்கையூர்- சீத்தாராம் நகர், காசிமேடு, மூலகொத்தளம் ஆகிய இடங்களில் இயங்கி வரும் மயான பூமிகளை பொது மக்கள் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

நகரில் நடப்பவை

- ‘சூடிக்கொடுத்த நாச்சியார்’ தலைப்பில் ஸ்ரீநிவாஸ கோபால மஹாதேசிகன் ஸ்வாமிகளின் உபந்யாஸம்: ஸ்ரீ வேதாந்த தேசிகன் தேவஸ்தானம், மயிலாப்பூர், மாலை 6.30 மணி
- ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி ஸபா சார்பில் 119–வது இசைப்பெருவிழா தொடக்க விழா மற்றும் விருது வழங்கும் விழா: ஸ்ரீபெரும்புதூர் ஸ்ரீமத் பரமஹம்ச அப்பன் பரகல ராமானுஜ எம்பார் ஜீயர் சுவாமிகள் பங்கேற்பு, வித்யா பாரதி அரங்கம், காலை 11.
- சென்டர் ஃபார் சாஃப்ட் பவர் மற்றும் தேஜாஸ் ஃபவுண்டேசன் சார்பில் புத்தக வெளியீட்டு விழா: முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் டி.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, சின்மயா மிஷன் சுவாமி மித்ரானந்தா, அமெரிக்க யோகா ஆசிரியர் எடி ஸ்டெர்ன் மற்றும் மதுசூதனன், கலைச்செல்வன் பங்கேற்பு, ஒய்எம்ஐஏ ஹால், மயிலாப்பூர், மாலை 4.
- சென்னைப் பல்கலை தமிழ் துறை சார்பில் வா.செ. குழந்தைசாமி – குலோத்துங்கன் தமிழ் மேம்பாட்டு விருது வழங்கும் விழா: பல்கலைக்கழக வளாகம், காலை 10.
- மியூசிக் அகாடமி சார்பில் 93–ம் ஆண்டு இசைப்பெருவிழா தொடக்க விழா: சிங்கப்பூர் தகவல் தொடர்புத் துறை அமைச்சர் எஸ்.ஈஸ்வரன், மியூசிக் அகாடமி தலைவர் என். முரளி உள்ளிட்டோர் பங்கேற்பு, டி.டி.கிருஷ்ணமாச்சாரி கலையரங்கம், மியூசிக் அகாடமி, மாலை 5.
- தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியுடன் படைப்பாளிகள் முன்னேற்ற கட்சி இணையும் விழா: ஜி.கே.வாசன், ஞானதேசிகன், சரவணன் உள்ளிட்டோர் பங்கேற்பு, தமாகா கட்சி அலுவலகம், தேனாம்பேட்டை, காலை 11.
- இலங்கை ஜெயராஜ் நடத்தும் திருக்குறள் தொடர் வகுப்புகள்: மகரிஷி பள்ளி, டாக்டர் குருசாமி சாலை, சேத்துப்பட்டு, காலை 9.30.

அரசியல் கட்சிகள், இதர அமைப்புகள் தங்களது நிகழ்ச்சி விவரங்களை மின்னஞ்சலில் அனுப்பலாம்.
மின்னஞ்சல் முகவரி:
press.release@hindutamil.co.in

FORM A
பொது அறிவிப்பு

இந்திய நொடிந்த நிலை மற்றும் திவால் நிலை வாரியம்,
(கார்ப்போரேட் நபர்களுக்குரிய இன்சால்வன்சி தீர்வு நடைமுறைகள்)
ஒழுங்கு விதிகள் 2016, ஒழுங்கு விதி 6-ன் கீழ்
“ரீஜென் பவர்டெக் பிரைவேட் லிமிடெட்”-க்கு கடன் வழங்கியவர்களின் கவனத்திற்கு.

முக்கிய விபரங்கள்

1.	கடன்பெற்ற கார்ப்போரேட் நிறுவனம்	**ரீஜென் பவர்டெக் பிரைவேட் லிமிடெட்**
2.	கடன்பெற்ற கார்ப்போரேட் நிறுவனம் நிறுவப்பட்ட ஆண்டு	27.12.2006
3.	கடன்பெற்ற கார்ப்போரேட் நிறுவனம் பதிவு செய்துள்ள / இணைப்பு பெற்றுள்ள அதிகார அமைப்பு	ROC - சென்னை
4.	கடன்பெற்ற கார்ப்போரேட் நிறுவனத்தின் கார்ப்போரேட் அடையாள எண்.	U40109TN2006PTC085606
5.	கடன்பெற்ற கார்ப்போரேட் நிறுவனத்தின் பதிவு அலுவலக முகவரி மற்றும் முதன்மை அலுவலக முகவரி	**பதிவு அலுவலகம்:** சிவாநந்தம், முதல் தளம், புது எண்.1, புல்லா அவின்யூ, ஷெனாய் நகர், சென்னை, தமிழ்நாடு-600 030. **Manufacturing Facility at:** சர்வே எண்.182 to 188, APIIC இண்டஸ்ட்ரியல் பார்க், மாம்பட்டு கிராமம், தடா மண்டல், நெல்லூர் மாவட்டம்-524 121 ஆந்திர பிரதேஷ், இந்தியா
6.	கடன்பெற்ற கார்போரேட் நிறுவனத்தின் இன்சால்வன்சி தொடங்கும் தேதி	09.12.2019
7.	இன்சால்வன்சி தீர்வு நடைமுறை முடிவுறும் என எதிர்பார்க்கப்படும் தேதி	05.06.2020
8.	இடைகால தீர்வு கொணர்ந்த தொழில்முறை நபரின் பெயர், மற்றும் பதிவு எண்.	**எபினேசர் இன்பராஜ், இடைகால தீர்வு கொணர்ந்த தொழில்முறையாளர்,** Reg.No.IBBI/PA-001/IP-P00754/2017-2018/11286 397, பிரிசிஷியன் பிளாசா, எண்.23, 3-வது தளம், தேனாம்பேட்டை, அண்ணா சாலை, சென்னை-600 018, ebiadvocate@gmail.com
9.	இடைகால தீர்வு கொணர்ந்த தொழில்முறை நபரின் முகவரி மற்றும் மின்னஞ்சல் முகவரி	**எபினேசர் இன்பராஜ், இடைகால தீர்வு கொணர்ந்த தொழில்முறையாளர்,** Reg.No.IBBI/PA-001/IP-P00754/2017-2018/11286 397, பிரிசிஷியன் பிளாசா, எண்.23, 3-வது தளம், தேனாம்பேட்டை, அண்ணா சாலை, சென்னை-600 018, ebiadvocate@gmail.com
10.	இடைகால தீர்வு கொணர்ந்த தொழில்முறை நபரின் கடித முகவரி & மின்னஞ்சல் முகவரி	397, பிரிசிஷியன் பிளாசா, எண்.23, 3-வது தளம், தேனாம்பேட்டை, அண்ணா சாலை, சென்னை-600 018, regenpowercirp@gmail.com
11.	கோரிக்கைகள் சமர்ப்பிக்க இறுதி தேதி	27.12.2019 (உத்தரவிட்ட தேதி: **13.12.2019**)
12.	பிரிவு 21 உட்பிரிவு (6A)-ன் உட்கூறு (b)-ன் கீழ் இடைக்கால தீர்மான தொழில் முறையாளரால் பிரிக்கப்பட்ட கடன்தாரர்கள் வகைகள் (ஏதேனும் இருப்பின்)	பொருந்தாது
13.	ஒரு வகை கடன்தாரர்களின் அதிகாரப்பூர்வ பிரதிநிதியாக செயல்பட அடையாளம் காணப்பட்ட நொடிப்பு நிலை தொழில்முறையாளரின் பெயர்கள் (ஒவ்வொரு கணக்குக்கும் மூன்று பெயர்கள்)	பொருந்தாது
14.	(a) பொருத்தமான படிவங்கள் மற்றும் (b) அதிகாரப்பூர்வ பிரதிநிதிகளின் விபரங்கள் கிடைக்கும் முகவரி (NA)	Web link: https://www.ibbi.gov.in/home/downloads நேரடி (Physical) முகவரி: வ.எண்.10-ல் உள்ளது.

தேசிய கம்பெனி சட்ட தீர்ப்பாயம், தனது 09.12.2019 தேதியிட்ட ஆணை மூலம் ரீஜென் பவர்டெக் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு எதிராக கார்ப்போரேட் இன்சால்வன்சி தீர்வு நடைமுறைகளை துவக்க உத்திரவிட்டுள்ளது, என இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

எனவே ரீஜென் பவர்டெக் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு கடன் வழங்கியவர்கள் தங்களது கோரிக்கைகளுக்கான ஆதாரங்களை 27.12.2019 அன்று அல்லது அதற்கு முன்னர் மேற்படி வ.எண்.10-ல் காணும் முகவரியில் உள்ள இடைகால தீர்வு தொழில்துறை நபரிடம் சமர்ப்பிக்குமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நிதிக்கடன் வழங்கியவர்கள் தங்களது கோரிக்கை ஆதாரங்களை மின்னணு முறையில் மட்டும் சமர்ப்பிக்க வேண்டும். கடன் வழங்கியவர்கள் அனைவரும் தங்களது கோரிக்கை ஆதாரங்களை நேரில், அஞ்சலில் (அல்லது) மின்னணு முறையில் சமர்ப்பிக்கலாம்.

தவறான அல்லது பொய்யான கோரிக்கைகளை சமர்ப்பித்தால் அது தண்டனைக்கு உள்ளாகும்.

தேதி : 13.12.2019
இடம் : சென்னை

Sd/- எபினேசர் இன்பராஜ்,
இடைகால் தீர்வு கொணர்ந்த தொழில்முறையாளர்;
(Reg No: IBBI/PA-001/IP-P00754/2017-2018/11286)

மணப்பந்தல்
மணமகள் தேவை
தமிழ்
ஏழை பிராமண பெண் தேவை. எதிர்பார்ப்பு இல்லை. மணமகன் 32, சென்னை, 25000, ct: 9962294918
மணமகன் தேவை
தமிழ்
துளுவ வேளாளர் தமிழ், 28, உத்திரம்-3, BE பெங்களூரில் பணிபுரிகிறார். ராகு கேது தோஷம் உடைய பெங்களூர், சென்னையில் பணிபுரியும் மணமகன் தேவை. 9597725157, 9442210500
திருமணசேவை மையம்
www.brahminkalyanam.com, www.hindusmatri.com (Others). Total Free Service by Astrologer VJ.Raman Ct: 8939702500, 9445230940
21-55 வயதுள்ள 10/+2/Dip, Deg படித்த சுத்த/ராகு / கேது, செவ்வாய் தோஷமுள்ள பெண்களுக்கு முதல்மணம் / மறுமணம்புரிய மணமகன் தேவை 8220759444
வரி விளம்பரங்கள்
வீடு / நிலம்
இடம் விற்பனைக்கு
கோவை–ல் இடம் வாங்க/விற்க நீங்கள் வாங்கிய இடம் கண்டுபிடிக்கவும் பத்திரம் சம்மந்தமான அனைத்து வேலைக்கும் TA Sivakumaar ct8754888051
தொழில்
பிரான்சைஸிகள் தேவை
3 K market place
Franchise offer: Retail Sales using Printed Catalog. Multiple Revenue options
Ct: 79044 25324
பொது
சுற்றுலா
தினசரி திருப்பதி / ஷிரடி தர்சன் Kerala, Goa, Singapore Packages. Sri Balaji 9884053380
SLN Tours Chennai
Andaman & Havelock 4★Hotels - 4N/5D Fare Rs.24,800 PP + Flight Fare 26th - 30th Jan 2020
Assam & Meghalaya 4★Hotels - 5N/6D Fare Rs.27,000 PP + Flight Fare 7th - 12th Feb 2020
Rajasthan Jaipur - Jothpur - Jaisalmar Bikaner - Pushkar 4★Hotels - 6N/7D Fare Rs.28,000 PP + Flight Fare 24th Feb - 01st March 2020
63790 69299
பொது
சுற்றுலா
6 நாள் ஷீரடி–ஜன.12,26 பண்டரிபுரம், மந்திராலயம் பிப். 9, 23, மார்ச் 8, 15, 22, 29, ஏப். 5, 12, 19, 26
8 நாள் காசி, அலகாபாத் கயா - பிப்.17, மார்ச்.2,16,30
11 நாள் காசி, கயா–மார்ச் 20 டெல்லி, ஆக்ரா–ஏப். 17, மே 1, 11, 22
16 நாள் காசி–பிப்.14, ஏப்.24 பூரி, அயோத்தி, டெல்லி, அமிர்தசரஸ், ஹரிதுவார்
16 நாள் நேபாள், முக்திநாத், காசி மார்ச் 15, ஏப். 5, 19, 26, மே 3, 10, 17, 24, 31
11 நாள் கேங்டாக், டார்ஜிலிங் ஏப்.8,15,22,29, மே 6,13,20,27
15 நாள் பஞ்சதுவாரகா மார்ச்10 10 நாள் ஆந்திரா–பிப்.6
13 நாள் ராஜஸ்தான்–பிப்.11
14 நாள் நவஜோதிலிங்கம்–பிப்.9
7 நாள் கேரளா (BOAT HOUSE) - பிப்.3
9 நாள் இலங்கை 4 நாள் துபாய்
6 நாள் சிங்கப்பூர், மலேசியா
5 நாள் அந்தமான் 4 நாள் கோவா
10 + 1 PERSON FREE
SRINIVASA TOUR
9710025326
பிறசேவை பகுதி
கலை நிகழ்ச்சிகள்
ஸ்ரீதேவி பைன் ஆர்ட்ஸ்
டிவியில் பாட வேண்டுமா
NO வயசு ONLY வாய்சு

இன்று (15.12.19) பொதிகையில் காலை 10.30 முதல் 11.00 மணி வரை
வாங்க பாட வாங்க நிகழ்ச்சியை பார்க்கவும்.
தொடர்புக்கு :
9841279123
வருந்துகிறோம்!
இரங்கல்
ஆண்டு நினைவு நாள்
8th Anniversary

SOLAIMALAI RAMASUNDARAM
Born 29.12 1936
Expired 15.12.2011
In fond remembrance of our beloved Appa.
Ramsundar & Ramkumar.
Malarvizhi, Anuradha, Kavitha,
Rachna,Bharath ,Lakshitha ,
Relatives & Friends.
+919821633784
இந்து தமிழ் திசை
சந்தாதாரர் ஆக வேண்டுமா?
எங்கள் முகவர் உங்களைத் தொடர்புகொள்ள குறுஞ்செய்தி: HTS<ஸ்பேஸ்> உங்கள் பின்கோடு இதை டைப் செய்து 9773001174 எண்ணுக்கு அனுப்பவும்.
மின்னஞ்சல்:
circ@hindutamil.in
டிசம்பர் மாதச் சந்தா – ரூ.217,
ஆண்டுச் சந்தா – ரூ. 2,527
Would you like to become a Successful Exporter !!
Are you looking to set your career in International Trade!
Don't Miss It !! Admission Open !!
India's Premier Facilitator of International Trade FIEO
Enrolling now for the forthcoming 8th batch of
DIPLOMA IN INTERNATIONAL TRADE MANAGEMENT
For Whom
Entrepreneurs, Exporter / Importer, Employee of Export Business Companies, Customs Agents, Graduates, Shipping and Freight forwarding companies, C & F Agents, Buying Agents, Merchandisers and Anyone who is interested in International Business, etc.,
Session with Situations to provide hands own experience in Export / Import business. Start ups can commence their export during the course with the support of hand holding services without any additional cost
6 Months Course - Only on Saturdays / Fees: Rs. 38,500/- + GST 18%
For More Information
FEDERATION OF INDIAN EXPORT ORGANISATIONS
(SET UP BY MINISTRY OF COMMERCE, GOVT. OF INDIA)
7th Floor, Spencer Plaza, 769, Anna Salai, Chennai - 600 002
Phn: 044-28497755 / 66 / 77, Mob: 97890 08201
Email: yasarshariff@fieo.org

இந்து தமிழ் திசை
பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.
படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

எமது பதிப்புகள்: சென்னை, காஞ்சிபுரம், புதுவை, வேலூர், கோவை, திருப்பூர், சேலம் தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி
Published by N. Ravi at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by D.Rajkumar at Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist., Pin: 603209. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).